**2026.08.10 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்**

01. **வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒருங்கிணைந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்**

உலக வங்கிக் குழுமத்தின் சர்வதேச அபிவிருத்தி இணை நிறுவனத்தால் 1,000 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி 2026 – 2031 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது நாட்டுக்கு வழங்கப்படவுள்ளதுடன், அதில் 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒருங்கிணைந்த பிராந்திய அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 2026.02.09 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கிடைக்கப்பெற்ற அங்கீகாரத்தின் பிரகாரம், இலங்கை அரசுக்கும் உலக வங்கிக் குழுமத்திற்கும் இடையில் இடம்பெற்ற கடன் உடன்பாட்டுப் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்துள்ளது. இவ் ஒருங்கிணைந்த பிராந்திய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் பொருளாதார ஆற்றல்வளங்களுடன் கூடிய வகுதிகளைப் பலப்படுத்தல், நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முனைவோரை ஊக்குவித்தல், பொருளாதார வாய்ப்புக்களை அதிகரித்தல் மற்றும் தொடர்புகளை விரிவாக்கம் செய்வதன் மூலம், மக்களுடைய வாழ்வாதாரங்களை அதிகரித்தல், பேண்தகு பிராந்திய அபிவிருத்தியின் மூலம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பிராந்திய பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தல் மற்றும் போட்டித்தன்மையை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, உத்தேச வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி வசதியை உலக வங்கி குழுமத்தின் சர்வதேச அபிவிருத்தி இணை நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நிதி ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

02. **நெல் சந்தைப்படுத்தல் சபையிடமுள்ள மொத்த நெல்லை அரிசியாக மாற்றி சந்தைக்கு விநியோகித்தல்**

2026.07.22 அன்று இடம்பெற்ற 34 ஆவது உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் அரசால் நெல் கொள்வனவுக்கு செயன்முறைக்கு வசதியளிப்பதை நோக்காகக் கொண்டு நெல் சந்தைப்படுத்தல் சபையிடமுள்ள நெல்லை, கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தானத்தின் மூலம் அரிசியாக மாற்றி சந்தைக்கு விநியோகிப்பதற்கு விதப்புரைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த விதந்துரைகளின் அடிப்படையில் கீழ்க்குறிப்பிட்டவாறு படிமுறைகளை மேற்கொள்வதற்கு கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்களும், வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் அவர்களும் இணைந்து சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

- நெல் சந்தைப்படுத்தல் சபையிடமுள்ள நெல்லின் மொத்தத் தொகையில் 30,000 மெற்றிக்தொன்களை கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தானத்தின் மூலம் அரிசியாக மாற்றுதல்.
- 30,000 மெற்றிக்தொன் நெல் தொகையை அரிசியாக மாற்றி 05 கிலோகிராம், 10 கிலோகிராம், 25 கிலோகிராம் மற்றும் 50 கிலோகிராம் பொதிகளாக விநியோகிப்பதற்காக கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்தால், நெல் சந்தைப்படுத்தல் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அரிசி ஆலை உரிமையாளர்களிடமிருந்து விருப்பக் கோரல்களைப் பெற்றுக்கொள்ளல்.



163, කිරුළපන මාවත, කොළඹ 05, ශ්‍රී ලංකාව.
163, கிருலபன எவனியூ, கொழும்பு 05, இலங்கை.
163, Kirulapona Avenue, Colombo 05, Sri Lanka.
දු தொ T - (+94 11) 2515759
ෆැ பெ F - (+94 11) 2514753
ඊ மி E - dg@dgi.gov.lk
www.dgi.gov.lk
www.news.lk

- 2025.12.15 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்ட தீர்மானத்திற்கமைய, நெல் சந்தைப்படுத்தல் சபை, கூட்டுறவுத் மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட லங்கா சதொச, தேசிய அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ நிறுவனம் மற்றும் ஹெக்டயர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் போன்ற நிறுவனங்களின் அதிகாரிகளுடன் கூடியதாக நியமிக்கப்பட்டுள்ள விலை நிர்ணயக் குழுவால் நெல்லை அரிசியாக மாற்றுகின்ற விகிதம் மற்றும் அரிசிக்குப் பொருத்தமான விலையை நிர்ணயித்தல்.
- மேற்குறிப்பிட்டவாறு தயாரிக்கப்படும் அரிசி வரையறுக்கப்பட்ட லங்கா சதொச, கூட்டுறவு வலையமைப்பு மற்றும் தனிப்பட்ட தரப்பினர்கள் மூலம் சந்தைக்கு விநியோகித்தல்.

### 03. ‘World CIO 200 Awards & Roadshow 2026’ நிகழ்ச்சித்திட்டத்தை இலங்கையில் நடாத்துவதற்கு உபசரிப்புச் செலவுகளை மேற்கொள்ளல்

‘World CIO 200 Awards & Roadshow 2026’ நிகழ்ச்சித்திட்டம், பிரதம தகவல் அதிகாரிகள், பிரதம அனுபவம் வாய்ந்த அதிகாரிகள், டிஜிட்டல் நிலைமாற்றத் தலைவர்கள், புத்தாக்குநர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தக நிறைவேற்று அதிகாரிகளுக்கான உலகில் முன்னணியான தளமாகக் கருதப்படுகின்றது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் அடுத்த படிமுறை அடுத்துவரும் செப்டெம்பர் மாதத்தில் இலங்கை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டம் உலகளாவிய ரீதியில் GEC Media Group ஆல் ஒழுங்குபடுத்தப்படுவதுடன், அனைத்துச் செலவுகளையும் மேற்கொள்வதற்கமைய HTP Global Technologies LLC இனால் எமது நாட்டில் நடாத்தப்படும் நிகழ்ச்சித்திட்டத்தின் முகாமைத்துவம் மற்றும் நிதியிடல் மேற்கொள்ளப்படுகின்றது. சர்வதேச மாநாடு, தலைமைத்துவ ஒன்றியம், வர்த்தகத் தொடர்புகளைக் கட்டியெழுப்புகின்ற அமர்வுகள், முதலீட்டு ஊக்குவிப்புச் செயற்பாடுகள், வர்த்தகங்களுக்கிடையிலான சந்திப்புக்கள், கண்காட்சிகள் மற்றும் விருது வழங்கும் வைபவம் போன்ற நிகழ்ச்சிகளுடன் கூடிய ஐந்து நாட்கள் நிகழ்ச்சித்திட்டமாக நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு 50 நாடுகளுக்கும் மேலதிகமாக சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரிகள் 400 பேருக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். அத்துடன் புத்தாக்கம், இளைஞர்களின் பங்கேற்பு, விளையாட்டு சுற்றுலா வணிகங்கள் மற்றும் சமுதாயப் பங்கேற்பை அதிகரிப்பதற்கு சர்வதேச ‘Tech Marathon’ நிகழ்ச்சித்திட்டமும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதன் மூலம் எமது நாட்டுக்கு கிடைக்கின்ற பொருளாதாரம், சுற்றுலாத்துறை முதலீடுகள் மற்றும் மூலோபாய அனுகூலங்களைக் கருத்தில் கொண்டு, ‘World CIO 200 Awards & Roadshow 2026’ நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ‘Tech Marathon’ நிகழ்ச்சித்திட்டத்தை எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் நடாத்துவதற்கு இலங்கை உபசரிப்புச் செலவுகளை மேற்கொள்வதற்காக விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 04. ‘தித்வா புயல் அனர்த்தத்தின் பின்னரான புனரமைப்புக்கள் மற்றும் வாழ்வாதார உதவித்திட்டங்களை’ அமுல்படுத்தல்

‘தித்வா புயல் அனர்த்தத்தின் பின்னரான புனரமைப்புக்கள் மற்றும் வாழ்வாதார உதவித்திட்டங்களை’ அமுல்படுத்துவதற்காக கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காக 2026.06.15 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில், குறித்த கடன் வசதியின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சலுகை பொது மூலதன வளங்களிடமிருந்து 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் நிரந்தர பொது மூலதன வளங்களிடமிருந்து 100 மில்லியன் அமெரிக்க டொல்கள் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது. புயல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள வீதி உட்கட்டமைப்பு வசதிகளைப் புனரமைத்தல் மற்றும் மீள்நிர்மாணித்தல், சேதமடைந்துள்ள

நீர்ப்பாசனக் கட்டமைப்புக்களை இயல்பு நிலைக்குக் கொண்டு வருதல் மற்றும் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் வாழ்வாதாரங்கள் மற்றும் வீடுகளை இயல்பு நிலைமைக்குக் கொண்டு வருதல் போன்ற மூன்று முக்கிய கூறுகளுக்கு இக்கடன் வசதியைப் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த நிதி வசதிகளைப் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு ஏற்புடைய நிதி ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. லங்கா மெட்ரோ ட்ரான்சிற் (தனியார்) கம்பனிக்கு பங்கு மூலதனத்தை வழங்குதல்**

எமது நாட்டின் பொதுப் போக்குவரத்தை நவீனமயப்படுத்தும் நோக்கில் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான நிர்வாகக் கம்பனியான லங்கா மெட்ரோ ட்ரான்சிற் (தனியார்) கம்பனி 2025.10.03 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது. க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட தாழ் மிதிபலகை கொண்ட 10 பேரூந்துகளைப் பயன்படுத்தி இக்கம்பனியால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கொழும்பு நகரப்புற முன்னோடித் தொழிற்பாடுகளில் தற்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் கருத்தில் கொள்ளும் போது இச்சேவைகளின் வணிக ரீதியான ஆற்றல்வளங்கள் மற்றம் பொதுமக்களுடைய வரவேற்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, இக்கம்பனிய எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் மேலும் 112 தாழ் மிதிபலகை பேரூந்துகளை சேவையில் அமர்த்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இப்பேரூந்து தொழிற்பாட்டு நடவடிக்கைகளை முறைசார்ந்த வகையிலும் வினைத்திறனாகவும் பேணிச் செல்வதற்காக ஏக்கல பிரதேசத்தில் முழுமையான மத்திய வேலைத்தளமொன்றை நிர்மாணித்தல், தலங்கம, கடவத்த, இரத்மலான மற்றும் ஹோமாகம போன்ற இடங்களில் நவீன பேருந்து சாலைகளை நிர்மாணித்தல், உள்ளக வீதிகள் மற்றும் பேருந்து தரிப்பிடத் திடலை அபிவிருத்தி செய்தல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை துரிதமாக அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திப் பணிகளுக்கு பயன்படுத்துவதற்கு லங்கா மெட்ரோ ட்ரான்சிற் (தனியார்) கம்பனிக்கு 800 மில்லியன் ரூபாய்களை இவ்வாண்டிலும் மற்றும் 2027 ஆம் ஆண்டில் கம்பனியின் இயக்க நடவடிக்கைகளுக்கு மேலும் 267.5 மில்லியன் ரூபாய்களாக பங்கு மூலதனத்தை வழங்குவதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. அதிவேக நெடுஞ்சாலைகளின் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் பராமரிப்புக்களுக்கான வாகனங்கள் மற்றும் இயந்திரோபகரணங்களின் பெறுகை**

312 கிலோமீற்றர்கள் தூரம் 10 ஆண்டுகளுக்கு மேலான காலப்பகுதியில் எமது நாட்டில் பயன்படுத்தப்பட்டு வருவதுடன், ஏறத்தாழ 92 கிலோமீற்றர்கள் தூரத்துடன் கூடிய துறைமுக அணுகல் அதிவேக நெடுஞ்சாலை, மத்திய அதிவேக நெடுஞ்சாலை I பகுதி (கடவத்த தொடக்கம் மீரிகம வரை) மற்றும் மத்திய அதிவேக நெடுஞ்சாலை II பகுதி (பொத்துஹர தொடக்கம் கலகெதர வரை) 2027 – 2028 காலப்பகுதியில் பயன்பாட்டுக்கு இணைக்கப்படவுள்ளது. புதிதாக நிர்மாணிக்கப்படுகின்ற அதிவேக நெடுஞ்சாலையை இயக்குவதற்கும் மற்றும் பராமரிப்பதற்கும், தற்போதுள்ள அதிவேக நெடுஞ்சாலைகளில் பயன்படுத்தப்பட்டு வரும் ஒருசில வாகனங்கள் மற்றும் இயந்திரோபகரணங்கள் காலங்கடந்த நிலையில் காணப்படுவதால் அவற்றை மீளமைப்பதற்கும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு புதிய வாகனங்கள் மற்றும் இயந்திரோபகரணங்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, இப்பணிகளுக்கு அதிவேக நெடுஞ்சாலை வருமானங்களில் 1,200 மில்லியன் மதிப்பீட்டுச் செலவின் கீழ் கீழ்க்குறிப்பிட்டவாறு 21 வாகனங்கள் மற்றும் இயந்திரோபகரணங்களை பெறுகை செய்வதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர

அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

| தொடர் இல | வாகனங்கள் மற்றும் இயந்திரோபகரணங்கள் வகுதி | எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | இரட்டை ரக பிக்கப் ட்ரக் வண்டி (02 மோட்டார் வாகன முகாமைத்துவ வாகனங்கள், 01 கட்டணம் அறவிடும் வாகனம் மற்றும் 01 பொலிஸ் வாகனம்) | 04 |
| 02. | அதிவேக நெடுஞ்சாலை நோயாளர் காவு வண்டி | 02 |
| 03. | மேல் வேலைத்தள ட்ரக் வண்டி | 02 |
| 04. | தொலைநோக்கி ஏற்றி இறக்கும் வண்டி | 02 |
| 05. | நடைபாதைகளை துப்பரவாக்கும் வாகனங்கள் | 02 |
| 06. | அதிவேக நெடுஞ்சாலைகளை துப்பரவாக்கும் நீர்த்தூவல் வண்டி | 02 |
| 07. | தீயணைப்பு வண்டி | 02 |
| 08. | இழுவை வண்டி/விபத்து மீள்நிலை வண்டி | 03 |
| 09. | அதிவேக நெடுஞ்சாலை ஏற்றி இறக்கி | 02 |

### 07. நீண்டகால குத்தகை அடிப்படையில் அரசுக்குச் சொந்தமான குறைப் பயன்பாட்டு காணிகளை தேர்ந்தெடுக்கப்படும் முதலீட்டாளர்கள்/தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கும் வேலைத்திட்டம்

வெளிநாட்டு தொழில்களில் ஈடுபட்டு வெளிநாட்டு செலாவணியை அனுப்பியுள்ள அல்லது மேற்கொள்கின்ற விடயங்களை தொழில் முயற்சியாளர்களுக்கு பெருந்தோட்டத் துறையில் முதலீடு செய்வதற்கு வாய்ப்புக்களை வழங்குவதற்கு இயலுமாகும் வகையில், குறைப் பயன்பாட்டுக் காணிகளில் காணித்துண்டுகளை நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக 2026.01.12 அன்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. பெருந்தோட்ட மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு அந்தந்த தரப்பினர்களுடன் கலந்துரையாடல்களை நடாத்தி இவ்வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்து 117 ஹெக்டெயார், மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான 88 ஹெக்டெயார்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான 42 ஹெக்டெயார்கள் குறைப் பயன்பாட்டுக் காணிகள் 247 ஹெக்டெயார்கள் கீழ்க்காணும் அளவுகோல்களுக்கமைய அடையாளங் காணப்படும் பொருத்தமான முதலீட்டாளர்களுக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் கையுதிர்ப்பதற்கு பெருந்தோட்ட மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

- முதலீட்டாளர் ஒருவரின் உயர்ந்தபட்ச வயதை 50 ஆகக் கருதப்படல்.

- பெருந்தோட்ட/விவசாய நடவடிக்கைகள், பெருந்தோட்டஞ்சார் சுற்றுலாத்துறை நடவடிக்கைகள், கால்நடை அபிவிருத்தி, நீர் மின்னுற்பத்தி, சூரிய மின்கல மின்னுற்பத்தி, கைத்தொழில்சார் உற்பத்திகள், நன்னீர் மீன்பிடி மற்றும் பிற பெருந்தோட்டஞ்சார் பொருளாதாரப் புத்தாக்க நடவடிக்கைகள் போன்ற துறைகளுக்கான முதலீட்டு வாய்ப்புக்களை வழங்கல்
- முறையான பெறுகைச் செயன்முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு முதலீட்டாளருக்கு உயர்ந்தபட்சம் ஹெக்ரெயார் 1 – 4 வரையான குறைப் பயன்பாட்டுக் காணியின் ஒருபகுதியை நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் வழங்கல்
- கடந்த 10 ஆண்டுகளில் 03 ஆண்டுகள் அல்லது அதற்கு அதிகமான காலம் புலம்பெயர் தொழில்களில் ஈடுபட்ட அல்லது புலம்பெயர் தொழிலாளராக தற்போது 03 ஆண்டுகளுக்கு மேலான காலப்பகுதி தொழில்புரிகின்ற நபர்களுக்கான வேலைத்திட்டத்தின் கீழ் முன்னுரிமை வழங்கல்.

**08. தெங்குக் காணிகளைப் புனரமைக்கும் விசேட வேலைத்திட்டம்**

எமது நாட்டில் நிலவுகின்ற தெங்குக் கேள்விக்கு சமமான வழங்கலுக்கும் மற்றும் தொடர்ந்து வரும் மாதங்களில் ஏற்படுமென அனுமானிக்கப்பட்டுள்ள 'எல்நினோ' நிலைமையிலிருந்து தெங்குச் செய்கையைப் பாதுகாப்பதற்காக தெங்குக் காணிகளின் விளைதிறனை அதிகரிப்பதற்கு பேண்தகு செய்கை முறைகளை மேம்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்காக சிறிய அளவிலான தெங்குக் காணி உரிமையாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில், தெங்குக் காணிகள் புனரமைப்பு விசேட வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டத்தின் கீழ், 2026 ஆம் ஆண்டில் 85,000 ஏக்கர்கள் தெங்குக் காணிகளை உள்ளடக்குவதற்கும், தொடர்ச்சியான 03 ஆண்டுகளுக்கு இவ்வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, 05 ஏக்கர் அல்லது அதற்குக் குறைவான தெங்குக் காணி உரிமையாளர் சிறியளவிலான தெங்குச் செய்கையாளர்களுக்கு கீழ்க்காணும் பணிகளுக்கு செலவிடப்படும் தொகையில் உயர்ந்தபட்சம் 65% சதவீதத்தின் கீழ் ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கு பெருந்தோட்ட மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

| தொடர் இல | பணிகள் | செலுத்தப்படும் உயர்ந்தபட்சத் தொகை |
|---|---|---|
| 01. | தெங்குச் செய்கைக்கு உரம் மற்றும் டொலமைற் இட்டு மூடுதல் | ஒரு தென்னை மரத்திற்கு 700/- ரூபாய்கள் |
| 02. | தெங்குச் செய்கைக்கு டொலமைற் இட்டு மூடுதல் | ஒரு தென்னை மரத்திற்கு 200/- ரூபாய்கள் |
| 03. | தெங்குக் காணிக்கான பாசன நீர்ப்பாய்ச்சல் | ஒரு ஏக்கருக்கு 50,000/- ரூபாய்கள் |

### 09. மகப்பேற்று மற்றும் ஆரம்பப் பிள்ளைப்பருவ போசாக்கு சேவைகள் கருத்திட்டத்தை அமுல்படுத்தல்

கொறோனா தொற்று நோய் நிலைமையின் பின்னர் எமது நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு ஒருசில காரணிகளால் இடர்களுக்கு ஆளாகக்கூடிய மக்கள் குழுக்களின் போசாக்கு நிலைமை குறைவடைந்துள்ளமை பதிவாகியுள்ளது. இந்நிலைமை குறிப்பாக, நுவரெலியா, இரத்தினபுரி, பொலன்னறுவை மற்றும் திருகோணமலை போன்ற மாவட்டங்களில் பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது. அதனால், குறித்த மாவட்டங்களில் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 05 வயதுக்குக் குறைவான பிள்ளைகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சமுதாய அடிப்படையிலான போசாக்கு இடையீடுகளுக்கான அணுகலை அதிகரிப்பதற்காக கருத்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, உலக வங்கிக் குழுமத்தின் ஜப்பான் சமூக அபிவிருத்தி நிதியத்தால் 2.73 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியின் கீழ் 03 ஆண்டுகளுக்கு குறித்த மாவட்டங்களில் மகப்பேற்று மற்றும் ஆரம்பப் பிள்ளைப்பருவ போசாக்கு சேவைகள் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 10. சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்திற்கான சீர்திருத்த நிலையத்தை நிர்மாணித்தல்

1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் கீழ் சுற்றுலா நீதிமன்றங்கள் மற்றும் நீதிவான் நீதிமன்றங்கள் மூலம் சிறு தவறாளர்களுக்கு சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளைச் சட்ட ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டுள்ளன. அவர்களில் அதிகமானவர்கள் போதைப்பொருள் அல்லது மதுசாரம் தொடர்பான தவறாளர்களாக இருப்பதுடன், அவர்களை அதிலிருந்து மீட்டெடுத்து ஆரோக்கியமான பிரஜைகளாக சமூகமயப்படுத்துவதற்கு விசேட கவனத்தைச் செலுத்தி சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் கட்டியெழுப்புவதற்கு சமுதாயஞ்சார் சீர்திருத்தச் செயன்முறைக்கு உட்படுத்தப்படுவர். ஆயினும், சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்திடம் அதிகமான போதைப்பொருட்களுக்கு அடிமைப்பட்டு தவறாளர்களாக இருக்கின்ற ஆட்களுக்கு வதிவிட சிகிச்சையை வழங்குவதற்குத் தேவையான பொருத்தமான போதியளவு விடுதி வசதிகள் இல்லை. அத்துடன், இத்திணைக்களத்திற்குச் சொந்தமான எவ்வித வதிவிட/வதிவிடமற்ற சீர்திருத்த நிலையங்களும் இல்லை. அதனால், இந்நிலைமையைக் கருத்தில் கொண்டு, கெக்கிராவ பிரதேசத்தில் அடையாளங் காணப்பட்டுள்ள 1.33 ஹெக்டெயார் நிலப்பரப்பில் நீதிமன்ற கட்டளைகள் மூலம் வழங்கப்படும் போதைப்பொருள் தொடர்பான தவறாளர்களுக்கு சீர்திருத்த நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு 635 மில்லியன் மதிப்பீட்டுச் செலவின் கீழ் கருத்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 11. ‘தித்வா’ அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள வணக்கத்தலங்களை மீண்டும்கட்டியெழுப்பும் வேலைத்திட்டம்

‘தித்வா’ புயல் நிலைமைகளால் 758 பௌத்த விகாரைகள், 272 இந்துக் கோயில்கள், 199 முஸ்லிம் பள்ளிவாசல்கள் மற்றும் 99 கிறிஸ்தவ தேவாலயங்களும் பல்வேறுபட்ட அனர்த்தங்களுக்கு உள்ளாகியுள்ளமை பதிவாகியுள்ளது. 2026.04.27 மற்றும் 2026.06.15 திகதிய அமைச்சரவைத் தீர்மானங்களுக்கமைய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 329.62 மில்லியன் ரூபாய்கள் உள்ளிட்ட புத்தசாசன நிதியம், மத்திய கலாச்சார நிதியம் மற்றும் அநகாரிக தர்மபால மன்றத்தால் ஒதுக்கப்பட்டுள்ள 929.69 மில்லியன் ரூபாய் நிதியைப் பயன்படுத்தி தற்போது குறித்த வணக்கத்தலங்களில் 250 தலங்களில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சேதமடைந்துள்ள எஞ்சிய வணக்கத்தலங்களில் மேலும் 144 தலங்களை 232.07 மில்லியன் ரூபாய் நிதியைப் பயன்படுத்தி

புனரமைப்புச் செய்வதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. நுரைச்சோலை லக்விஜய மின்னுற்பத்தி நிலையத்திற்கான நிலக்கரிப் பெறுகை**

2026/2027 ஆம் ஆண்டுக்கான லக்விஜய மின்னுற்பத்தி நிலையத்திற்குத் தேவையான 2.28 (± 10%) மில்லியன் மெற்றிக்தொன் நிலக்கரியைப் பெறுகை செய்வதற்காக 2026.03.30 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், வழங்கலுக்குள்ள இடரை இல்லாமல் செய்து நாட்டில் வலுசக்திப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இயலுமாகும் வகையில், ஒரு தடவை நிலக்கரி வழங்கலுக்கான இரண்டு நிலக்கரி விநியோகத்தர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு தேசிய பெறுகைக் குழுவால் உடன்பாடு வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சர்வதேச போட்டி விலைமுறிக் கோரல் முறையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன், 09 விலைமனுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. குறித்த விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர், உயர்மட்ட நிரந்தரப் பெறுகைக் குழுவின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதப்புரைகளின் அடிப்படையில், இப்பெறுகையை கீழ்க்காணும் வகையில் வழங்குவதற்காக வலுசக்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

| விலைமனுதாரர் | நிலக்கரி அளவு | |
|---|---|---|
| Aditya Birla Global Trading (Singapore) Pte. Ltd | 70% | 1.596 மில்லியன் மெற்றிக்தொன் (± 10%) |
| Mohit Minerals Limited (India) | 30% | 0.684 மில்லியன் மெற்றிக்தொன் (± 10%) |

**13. முத்துராஜவெல முனையத்தில் புதிய எரிபொருள் களஞ்சிய தாங்கிகள் மூன்றினை (03) நிர்மாணித்தல்**

இலங்கை பெற்றோலிய மொத்தக் களஞ்சிய முனையக் கம்பனியின் நிதியத்தைப் பயன்படுத்தி முத்துராஜவெல முனையத்தில் 15,000 கனமீற்றர் எரிபொருள் களஞ்சிய தாங்கிகள் 02 உம் மற்றும் 10,000 கனமீற்றர் எரிபொருள் களஞ்சிய தாங்கி ஒன்றையும் நிர்மாணிப்பதற்கு 2025.06.02 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், இக்கருத்திட்டத்தை அமுல்படுத்தும் போது சுற்றாடல், சட்ட ரீதியான மற்றும் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் தொடர்பாக அந்தந்த தரப்பினர்களுடன் கலந்துரையாடி பொருத்தமான தீர்மானங்களை எடுக்குமாறு வலுசக்தி அமைச்சர் மற்றும் சுற்றாடல் அமைச்சரிடம் கோரிக்கை சமர்ப்பிப்பதற்கு 2026.07.20 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் விதிக்கப்பட்டுள்ள விதப்புரைகள் மற்றும் நிபந்தனைகள் இப்பெறுகையின் ஒப்பந்த உடன்படிக்கையில் உட்சேர்க்கப்பட்டுள்ளமையால், மற்றும் விலங்கினங்கள் மற்றும் தாவர இனங்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு வலுசக்தி அமைச்சர் மற்றும் சுற்றாடல் அமைச்சர் அவர்களால் அமைச்சரவைக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. அதற்கமைய, சர்வதேச போட்டி விலைமுறி முறைக்கமைய விலைமனுக்களைத் சமர்ப்பித்துள்ள விலைமனுதாரர்களில் உயர்மட்ட பெறுகைக் குழுவால் விதந்துரைக்கப்பட்டுள்ள கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான M/s Indo – East Engineering & Construction (Lanka) (Private) Limited and Ceylex Engineering (Private) Limited Joint Venture இற்கு 3.04 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு (பெறுமதி

சேர் வரி இல்லாமல்) மற்றும் 2,796.14 மில்லியன் இலங்கை ரூபாய்கள் (பெறுமதி சேர் வரி இல்லாமல்) தொகைக்கு குறித்த ஒப்பந்தத்தை வழங்குவதற்காக வலுசக்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீககாரம் வழங்கியுள்ளது.

**14. பெற்றோல், மேர்பன் வகை மசகு எண்ணெய் மற்றும் டீசல் பெறுகை**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் பெற்றோல் 92 Unl, மேர்பன் வகை மசகு எண்ணெய் மற்றும் டீசல் (0.05% M.S) நீண்டகால ஒப்பந்தத்தின் கீழ் கொள்வனவு செய்வதற்காக இக்கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள விநியோகத்தர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சர்வதேச பெறுகை முறையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்கமைய சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர், உயர்மட்ட நிரந்தரப் பெறுகைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரைகளின் அடிப்படையில், கணிசமான குறைந்தபட்ச விலைமனுதாரர்களுக்கு கீழ்க்காணும் வகையில் குறித்த பெறுகைகளை வழங்குவதற்கு வலுசக்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

| | பெற்றோலிய உற்பத்தி மற்றும் அளவு | கிடைக்கப் பெற்ற விலைமனுக்கள் | விதந்துரைக்கப்பட்ட விலைமனுதாரர் | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|
| 01. | பெற்றோல் 92 Unl – 1.2 மில்லியன் ± 5% பரல் | 04 | Aditya Birla Global Trading (Singapore) Pte. Ltd., Singapore | 2026.09.01 தொடக்கம் 2027.02.28 வரை |
| 02. | மேர்பன் வகை மசகு எண்ணெய் - 2.8 மில்லியன் ± 5% பரல் | 04 | Aditya Birla Global Trading (Singapore) Pte. Ltd., Singapore | 2026.11.01 தொடக்கம் 2027.02.28 வரை |
| 03. | டீசல் (0.05% M.S) - 1.12 மில்லியன் ± 5% பரல் | 06 | M/s Vitol Asia Pte. Ltd, Singapore | 2026.09.01 தொடக்கம் 2027.02.28 வரை |

**15. 1990 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு அனுகூல உத்தேச திட்ட சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

1990 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு அனுகூல உத்தேச திட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதிகள், சமகாலத் தேவைகள் மற்றும் கடற்றொழில் சமூகத்தவர்களுக்குப் பொருத்தமான வகையில் திருத்தம் செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. இச்சட்டத்திற்கு மேற்கொள்ள வேண்டிய பொருத்தமான திருத்தங்களை முன்மொழிவதற்காக அதிகாரிகள் குழுவொன்று மீன்பிடி, நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சின் செயலாளர் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளது. கடற்றொழில் ஓய்வூதியத்திற்குப் பங்களிப்புச் செய்வதன் மூலம் கிடைக்கின்ற அனுகூலங்களை அதிகரிப்பதற்காகவும் மற்றும் கடற்றொழிலாளர்கள் வயோதிப

நிலையை அடையும் போது சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு அனுகூல உத்தேச திட்டத்தை திருத்தம் செய்வதற்காக இக்குழு முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளது. அதற்கமைய, குறித்த முன்மொழிவுகளின் அடிப்படையில் 1990 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு அனுகூல உத்தேச திட்டச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக மீன்பிடி, நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**16. குடிவரவு சட்டமூலம்**

1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கும் போது 2024.09.24 ஆம் திகதி ஒன்பதாவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டமையால், குறித்த சட்டமூலம் தொடர்பாக தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இயலாமல் போயுள்ளது. பின்னர் குறித்த சட்டமூலத்திற்கு உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள தீர்மானத்தைக் கருத்தில் கொண்டு புதிய சட்டமொன்றை வரைவாக்கம் செய்வதற்காக 2025.08.18 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், தொடர்ந்த வரும் காலங்களில் வழங்கப்பட்டுள்ள இலத்திரனியல் கடவுச்சீட்டின் சிப் இற்கு உயிரியில் தரவுகளை உட்சேர்க்கும் முறையை அமுல்படுத்தும் Country Signing Authority Certification Authority ஆக குடிவரவு மற்றும் குடியகல்வு விடயதான அமைச்சின் செயலாளரைப் பெயரிடுவதற்கு, குறித்த சட்டமூலத்திற்கு உகந்த ஏற்பாடுகளை உட்சேர்ப்பதற்கு 2025.12.10 ஆம் திகதியன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இவ் ஏற்பாடுகளையும் உள்ளடக்கி சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள குடிவரவுச் சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கும் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**17. யுத்தத்தின் போது, அங்கீகரிக்கப்பட்ட இறங்கு துறைகள் ஊடாகவும் மற்றும் முறையான கடவுச்சீட்டைப் பயன்படுத்தாமல், நாட்டிலிருந்து வெளியேறி, இந்தியாவில் அகதிகள் அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டுள்ளவர்கள் தமது இலங்கையர்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தியுள்ளவர்கள், சுயமாக எமது நாட்டுக்கு மீண்டும் திரும்பும்போது, அவர்களுக்கு குடிவரவு ஒப்புதல் அனுமதி வசதிகளை வழங்குதல்.**

யுத்தத்தின் போது நாட்டில் நிலவிய உறுதிப்பாடற்ற சூழ்நிலை காரணமாக, அங்கீகரிக்கப்பட்ட இறங்கு துறைமுகத்தின் ஊடாக மற்றும் முறையான கடவுச்சீட்டைப் பயன்படுத்தாமல் இந்தியாவிற்கு இடம்பெயர்ந்து சென்று, பின்னர் இந்திய அரசாங்கத்தால் அகதிகளாகப் பதிவு செய்யப்பட்டவர்கள், ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலயத்தின் (UNHCR) மூலம் சுயமாக எமது நாட்டுக்குத் மீண்டும் திரும்புவதற்கு எதிர்பார்க்கின்றார்கள். அவர்கள் எமது நாட்டுக்கு மீண்டும் வருகை தருவதற்குத் தேவையான குடிவரவு ஒப்புதல் அனுமதி வசதிகள் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் வழங்கிய ஆலோசனைக்கமைய, கீழ்க்காணும் படிமுறைகளை மேற்கொண்டு, மேற்குறிப்பிட்டவாறு இந்தியாவிற்குச் சென்றுள்ள இலங்கையர்களுக்கு மீண்டும் எமது நாட்டுக்குத் திரும்பி வருவதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

- 2006-08-01 இற்கு முன்னர், அங்கீகரிக்கப்பட்ட இறங்குதுறை மற்றும் செல்லுபடியாகும் கடவுச்சீட்டைப் பயன்படுத்தாமல் நாட்டிலிருந்து வெளியேறி, இந்தியாவில் இடம்பெயர்ந்த

அந்நாட்டின் இலங்கை வெளிநாட்டுத் தூதரகத்தின் மூலம் தமது இலங்கையர் எனும் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொண்டவர்கள் தொடர்பாக அரச புலனாய்வு சேவையிடமிருந்து ஒப்புதல் அனுமதி அறிக்கையைப் பெற்றுக் கொள்ளல்.

- அவர்கள் கொலை, அரசுக்கு எதிரான துரோகம் மற்றும் சட்டத்தின் விசேட ஏற்பாடுகள் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளவாறான அல்லது விதிக்கப்பட்டுள்ள குற்றங்களை மேற்கொள்ளாத ஆள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல்.
- குறித்த ஆட்களுக்கான தற்காலிக வெளிநாட்டுக் கடவுச் சீட்டை வழங்கி 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்திற்கமைய, எவ்வித சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் அங்கீகரிக்கப்பட்ட இறங்குதுறை ஊடாக நாட்டுக்கு வருகை தருவதற்கான வாய்ப்பை வழங்குதல்.

- 2006-08-01 தொடக்கம் எமது நாட்டில் யுத்தம் முடிவடைந்த 2009-05-19 ஆம் திகதி வரை, அங்கீகரிக்கப்பட்ட இறங்குதுறை மற்றும் முறையான கடவுச்சீட்டைப் பயன்படுத்தாமல் நாட்டிலிருந்து வெளியேறி இந்தியாவுக்கு முறையற்ற வகையில் புலம்பெயர்ந்தவர்ளை, மேற்குறிப்பிட்டவாறு ஆள் அடையாளத்தைச் உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர் அரச புலனாய்வு சேவையிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஒப்புதல் அனுமதியைப் பெற்றுக்கொண்ட இலங்கையர்களுக்கு, 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்தின் மூலம் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், குறித்த சட்டத்தின் கீழ் எவ்வித சட்ட நடவடிக்கையையும் மேற்கொள்ளாமல் அங்கீகரிக்கப்பட்ட இறங்குதுறை ஊடாக நாட்டுக்கு வருகை தருவதற்கு வாய்ப்பு வழங்குதல்.
- கொலை, அரசுக்கு எதிரான துரோகம் மற்றும் சட்டத்தின் விசேட ஏற்பாடுகள் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளவாறான அல்லது விதிக்கப்பட்டுள்ள குற்றங்களுக்கு தவறாளர்களாக அடையாளங் காணப்பட்ட ஆட்களாக இருப்பின், அவர்களை இறங்குதுறைகளில் தடுத்து வைத்து தேவையான தொடர் சட்ட நடவடிக்கைக்கு ஏற்புடைய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படுதல்.

**18. தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமித்தல்**

இலங்கை விஞ்ஞானவியல் சேவை I ஆம் தர அதிகாரியான திருமதி. எச்.சீ.பீ.ஜயவீர அவர்களை முழுநேர பதில் கடமை அடிப்படையில் தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமிப்பதற்காக 2024.12.30 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய, அவர் இதுவரைக்கும் அப்பதவியில் கடமையாற்றி வருகின்றார். பொதுச் சேவைகள் ஆணைக்குழுவால் 2026.01.31 ஆம் திகதி தொடக்கம் இலங்கை விஞ்ஞானவியல் சேவையின் விசேட தரத்திற்கு அவர் பதவியுயர்த்தப்பட்டுள்ளார். அன்று தொடக்கம் திருமதி. எச்.சீ.பீ.ஜயவீர அவர்களை தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நிரந்தர நியமனமாக நியமிப்பதற்கு சுற்றாடல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*****

**தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.**